## பல்வகைமை குடியேற்ற வீசா (Diversity Visa)

### கண்ணோட்டம்

1990 ஆம் ஆண்டின் குடியேற்றச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட பல்வகைமை குடியேற்ற வீசா நிகழ்ச்சித் திட்டமானது, 1995 நிதியாண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வருடாந்த அதிர்ஷ்ட சீட்டிலுப்பு மூலம் 55,000 குடியேற்ற வீசாக்கள் கிடைக்கப் பெறுகின்றன. இச்சீட்டிலுப்பானது கடந்த ஐந்து வருடங்களில் ஐக்கிய அமெரிக்காவிற்கு குறைந்தளவான கட்டணங்களுடன் பெரும்பாலான நாடுகளிலிருந்து விண்ணப்பதாரிகளைத் தெரிவுசெய்வதன் மூலம் ஐக்கிய அமெரிக்காவில் குடியேற்றச் சனத்தொகையை பல்வகைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

பல்வகைமை குடியேற்ற வீசாவிற்காக விண்ணப்பிப்பதற்கு, **usvisas.state.gov** என்ற எமது இணையத்தளத்தில் **பல்வகைமை குடியேற்ற வீசா செயல்முறைகள் (Diversity Visa Process)** என்ற பகுதியிலுள்ள படிமுறைகளைப் பின்பற்றவும். அத்தகைய படிமுறைகளைப் பூரணப்படுத்தியதும், கென்ரக்கி தூதரக நிலையம்(KCC) மூலம் உங்களுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை மீள்பரிசீலனை செய்யவும்.

isharaiz.com